புதுமலர்: 04 இதழ்: 01

தை - மாசி

# அனல்

இணை ஆசிரியர்கள்
யோ. நிக்சன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்;
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்,
ரோமர் 12:11

சீயோன் தேவாலய பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

2007

01-01-2007

## பொருளடக்கம்

- அனலின் குரல்
- அனலின் அறைகூவல் - போதகர் கே. கே. பிலிப்
- எழும்பிப் பிரகாசி
- இயேசுகிறிஸ்துவின் நேரடி தொலைபேசி
- பக்தர்களின் பயிலகம்
- கதையும் கற்றதும்
- வாலிபர் வளாகம்
- மரணத்தின் வேளையில் உதிர்ந்த வார்த்தைகள்
- கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்
- குறுக்கெழுத்துப் போட்டி - 19
- மூவரி முத்துக்கள்
- நற்செய்திப் பகுதி
- என் காலங்கள்
- வினாவிடை - 19

## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும் வேதனையினாலும் குடும்பப் பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுதவேண்டிய விலாசம்**

**சீயோன் ஜெபக்குழு**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**Zion Prayer Group**
**347, Navalar Road,**
**Jaffna, Sri Lanka.**

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**The Editor "Anal"**
**347, Navalar Road,**
**Jaffna. Sri Lanka**

**ஆசிரியர் "அனல்"**
**347, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

TP: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11



# அனலின் குரல்

அப்பொழுது யூதேயா, கலிலேயா, சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று பக்தி விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகின்ற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின. (அப் 9 :31)

இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு எம்மிடமிருந்து விடைபெற்றுச் சென்றுவிட்டது. இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டை தேவபெலத்தோடு, புது உற்சாகத்தோடு வரவேற்போம். ஆம் கடந்து சென்ற ஆண்டில் நீங்கள் அனேக வேதனைகள், பாடுகள், துன்பங்கள் வழியாக கடந்து சென்றிருக்கலாம். உங்கள் அன்புக்குரியவர்களை இழந்து தவிப்போடு வந்திருக்கலாம். உங்கள் வாழ்வின் சமாதானம் இழந்தவர்களாக ஏங்கி நிற்கிறீகளா? இதோ! உங்கள் உள்ளத்தை இப்புதிய ஆண்டில் சமாதானப்படுத்த தேவனாலே முடியும். உங்களை ஆறுதல்படுத்த அவராலே ஆகும்.

ஆதித் திருச்சபையில் தேவனுடைய நாமத்தின் நிமித்தமாக வாழ்ந்த அடியார்களுக்கு அதிக வேதனைகள் ஏற்பட்டது உண்மைதான் இயேசுவின் நாமத்தைச் சொன்னவர்கள் சிறைகளில் அடைக்கப் பட்டார்கள். இயேசுவின் நாமத்தை விசுவாசித்தவர்கள் துன்புறுத்தப் பட்டனர். அத்தோடு அவர்கள் சிதறடிக்கப்பட்டனர். இன்னும் அதிகமாக கிறிஸ்துவுக்காக மரணத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனாலும் வேதம் சொல்கின்றது. இரட்சிக்கப்பட்டவர்கள் அனுதினமும் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்களென காரணம் இரட்சிக்கும் செயல் தேவ செயல். இரட்சிக்கும் திட்டம் தேவதிட்டம். இதனாலேதான் அப் 9:31 சொல்கின்றது சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து கர்த்தருக்கு பயப்படுகின்ற பயத்தோடும் பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின என்பதாக. இரட்சிப்பு கொடுப்பவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. ஆம் இந்த இரட்சிப்பை பெற்ற உங்கள் வாழ்வில் ஓர் உண்மையான சமாதானம் எப்போதும் காணப்படும் இதை யாரும் உங்களை விட்டு எடுக்கமுடியாது.

கிறிஸ்துவுக்காக வாழும் பரிசுத்தவான்களே, அவருக்கு என் வாழ்வை ஒப்புக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறேன் என தீர்மானம் எடுத்திருக்கும் சகோதரனே, சகோதரியே, உங்கள் வாழ்வில் நிம்மதியிழந்து தவிப்பவர்களே, தேவனுடைய ஜீவனுள்ள சபையாகிய விசுவாசியே, இப்புதிய ஆண்டில் உங்களுக்கோ நற்செய்தி என்னவென்றால் ஆதிச்சபையில் பல பாடுகளின் மத்தியிலும் சபையில் சமாதானமும், பக்திவிருத்தியும், தேவனுக்குப் பயப்படும் பயமும், பரிசுத்த ஆவியின் ஆறுதலும் பெருகிய வண்ணமாக உன்வாழ்விலும் பெருகும்.

பிரியமான அனல் வாசகர்களே! 2006 ஆம் ஆண்டுடன் எமது சபையும் "சீயோன் தேவாலயம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு முப்பது ஆண்டுகள் கடந்து விட்டது, அத்துடன் இவ் முப்பது வருடங்களும் சீயோன் தேவாலயத்துக்கு மேய்ப்பனாக தேவன் எமக்குத் தந்த அருமைப் போதகரையும் வாழ்த்தி நிற்கின்றோம்.

**-ஆசிரியர்-**

**2007**

**அனலின் அன்பு வாசகர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்கள்.**

**இப்புத்தாண்டில் இயேசுகிறிஸ்துவோடு, அவரது வெளிச்சத்தில், அவரது வசனத்தில், செல்லுமிடமெல்லாம் ஜீவனுள்ள சாட்சிகளாய், குறைவின்றி நிறைவாக, நிம்மதியாக, தேவசமாதானம் பெற்று வாழ அனலின் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்.**

**"உன்னைக் காக்கிறவர் உறங்கார்"**

சங்கீதம் 121:3

கிறிஸ்துவிடம் வருவதற்கான

# அனலின் அறைகூவல்

Pastor J. K. Philip

## பின் மாற்றக்காரன்!!!

(நீதி மொழிகள் 14:14)

**"பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன் வழிகளிலேயும்....... திருப்தியடைவான்."**

இன்று இவ்வுலக வாழ்வில் நாம் நம்மைப் பார்த்தே கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வி!

○ "நான்". . . . . . . பின்மாற்றக்காரனா?

இன்றைய பயங்கரமான உலகில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் அதாவது நாம் நம்மைப் பார்த்தே கேட்க வேண்டிய மிகவும் முக்கியமான அவசியமான கேள்வி நான் பின்மாற்றக்காரனா என்பதாகும். இக் கேள்வி பதில் காணப்படாத கேள்வியாக காணப்படாமல் பதில் கண்டுள்ள அர்த்தமுள்ள வாழ்க்கை வாழும் படியான ஓர் நிலைக்கு உந்தித் தள்ளுவதாக இருக்க வேண்டும். இன்று சிலர் பாவ மன்னிப்பின் நிலைக்குள் வந்து, இரட்சிப்படைந்து, ஞானஸ்நானம் பெற்ற நமக்கு இது பொருத்தமான கேள்வி அல்ல என எண்ணத் தோன்றும். இவ் வெண்ணம் பல தடவைகளில் தப்பெண்ணமாக இருப்பது உண்டு எனக் கூறினால் அது தவறாக இருக்க முடியாது. எனினும் கிறிஸ்து இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது அவருடன் நெருக்கமாயிருந்தவர்கள் பேதுரு, யோவான், யாக்கோபு என்பவர்கள் ஆகும். இவர்களில் பேதுரு முக்கியமானவனாவன். இந்த பேதுரு இயேசுவை குறித்து கூறிய அறிக்கை அவன் எந்தளவுக்கு கிறிஸ்துவைக் குறித்து எண்ணம் கொண்டிருந்தான் அல்லது கிறிஸ்துவோடு எவ்வளவு நெருக்கமாயிருந்தான் என்பதை எடுத்துக் காண்பிக்கின்றது.

பேதுருவைப் பொறுத்தவரை வேத ஆராட்சியாளர்கள் அவனுக்கு பெரிய மீன் பிடிகாரன் (BIG FISHERMAN) என்ற பெயரை சூட்டியுள்ளனர். அத்துடன்

பேதுரு மிகவும் துணிச்சல் மிக்கவன் எதைச் செய்வதற்கும் முந்திக் கொள்பவன். தண்ணீரின் மேல் நடந்தவன். ஜீவனுள்ள வார்த்தைகள் உம்மிடம் உள்ளது என அறிக்கையிட்டவன். (யோவான் 6:68) என்ன நேர்ந்தாலும் உம்மை விடுவதில்லை, உறுதியாய் பின்பற்றுவேன் என உறுதிமொழி அளித்தவன். நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் (மத் 16:16) என்ற மேன்மையான சத்தியத்தை கண்டுபிடித்து அறிக்கையிட்டவன். இப்படி மேன்மையான எண்ணங்களையும், அறிக்கைகளையும் வெளியிட்ட பேதுரு கிறிஸ்து நியாயம் விசாரிக்கப்பட்டு ஒரு நெருக்கமான நிலையில் இருக்கும் போது ஒரு சாதாரண வேலைக்கார பெண்ணுக்கு முன் கிறிஸ்துவை அறிக்கையிட பயந்தவனாக அவரை மறுதலிக்கவும், சபிக்கவும் தொடங்கினான். மேன்மையான அறிக்கைகளையும் உறுதி மொழிகளையும் கொடுத்த பேதுரு மேன்மையிழந்து தலைகுனிந்து போக காரணமாயிருந்தது, அவனுடைய பின்மாற்றமேயாகும். கிறிஸ்துவுக்காக முன் நோக்கியவன் இப்போது பின்னோக்குகிறான்.

ஆம்! பிரியமானவர்களே இப்படி கிறிஸ்துவோடு கூட இருந்த மேன்மையான காரியங்களை கண்டு பிடித்து கிறிஸ்துவைப் பின்பற்றிய பேதுருவிற்கே இந் நிலையானால் இன்று எம்முடைய வாழ்வைக் குறித்து சிந்திக்க வேண்டிய அதிக தேவையுள்ளது. எனவே நாம் எம்முடைய வாழ்விலும் எம்மைப் பார்த்துக் கேட்க வேண்டியது நான் பின்மாற்றக்காரனா என்பதாகும். இக் கேள்வியானது எம்மை நேர்த்தியான பாதையில் நடந்து செல்ல உதவியாக இருக்கும்.

பேதுருவின் விழுகைக்கான ஆறு படிகளைக் குறித்து இன்று ஆராய்ந்து பார்த்து அதன் மூலம் எம்முடைய வாழ்க்கையையும் ஆராய்ந்து நோக்குவது எமது ஆவிக்குரிய வாழ்வில் முன்னோக்கி நகர்ந்து தேவ சித்தத்தை செய்வதற்கு உந்தித் தள்ளும். எனவே வாசித்துக் கொண்டிருக்கும் நாம் எம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் பிரயோசனமுள்ளதாக இருக்கும்.




மத்தேயு 26:33ல் பேதுரு கூறிய கூற்றிலிருந்து அவனிதயத்துள் மறைந்து கிடக்கும் அகங்காரம் புலப்படுகின்றது. அதாவது உமது நிமித்தம் எல்லோரும் இடறலடைந்தாலும் நான் இடறலடையேன் என கூறுகிறான். இயேசு தன் பாடுகளைக் குறித்து கூறி இந்த இராத்திரியிலே என்னிமித்தமாக நீங்கள் இடறலடைவீர்கள் என கூறிய போதே இடை மறித்த பேதுரு மேற்குறிப்பிட்ட கூற்றைக் கூறுகிறான். இங்கு நான் இடறலடையேன். என்ற கூற்றிலிருந்து இதனைக் கண்டு கொள்ளலாம். இக் குணாதிசயமே பேதுருவின் வீழ்ச்சிக்கு முதல் படியாக அமைவதைக் காணலாம்.

இன்றும் எம்முடைய வாழ்விலும் ''நான" என்ற காரியம் ஒட்டியிருக்கும் என்றால் நாமும் வீழ்ச்சிக்கான முதல் படியில் நிற்கிறோம். இப்படிப் பட்ட குணவியல்பை உடையவர்கள் தாங்கள் திருத்தப்படுவதை விரும்பமாட்டார்கள். தங்களுடைய பிழைகள் சுட்டிக் காட்டப்படும் போது அதனை ஒத்துக் கொள்ளாமல் வேறுவிதமான காரியங்களை கூறி சமாளித்து விடுவார்கள். பிழைகள் சுட்டிக் காட்டப்படுது திருத்துவதற்கே, சமாளித்து வைத்திருப்பதற்கல்ல, பாவங்கள் சுட்டிக் காட்டப்படும் போது ஊழியர்கள் மேல் கோபப்படுவார்கள் அல்லது இது ஒரு சிறிய காரியம் தானே ஏன் பெரிது படுத்த வேண்டும் அது பரவாயில்லை எனக் கூறுவார்கள். சரீரம் தேவனுடைய ஆலயம் இதனை ஒருவன் கெடுக்கும் போது தேவனும் அவனை கெடுப்பார் என வேதாகமம் சுட்டிக் காட்டுகிறது. இதனாலேயே புகையிலை, வெற்றிலை, மதுபானம் போன்றன பாவமான காரியம் என சுட்டிக் காட்டப்படுகிறது. எனினும் அகங்காரமான போக்கு மனந் திரும்ப பெரும் தடையாக இருக்கிறது. அழிவுக்கு முன்னானது அகந்தை விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. என நீதிமொழிகள் 16:18 இல் வாசிக்கின்றோம். அதாவது அகந்தையானது மனந்திரும்புதலை தடை பண்ணி பாவத்தில் நிலைத் திருக்கச் செய்கிறது. இதனால் பாவத்தின் தண்டனையாக அழிவு உண்டாகிறது.

எனவே பேதுருவின் வீழ்ச்சியின் முதல் படி அகங்காரம் காணப்பட்டது போல் எமது வீழ்ச்சிக்கான முதல்படியான அகங்காரம் வராதபடிக்கு நாம் எச்சரிக்கையாக எமது வாழ்வைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய எதிர்பார்ப்பாகும், எனவே எச்சரிக்கையடைவோம் வாழ்வைக் காத்துக் கொள்வோம்.




''என்னோடு கூட ஒரு மணிநேரம் விழித்திருக்கக் கூடாதா" மத்தேயு 26:40 இது கிறிஸ்துவின் இருதயத்தில் இருந்து எழுந்த ஏக்கம் நிறைந்த கேள்வியாகும். கிறிஸ்து தன்னுடைய கடைசி நேரத்தில் ஜெபிக்கும் படியான வேண்டுதலை சீஷர்களிடம் கொடுத்திருந்தார். இதில் இயேசுவுக்காக வைராக்கியம் காண்பித்த பேதுருவும் அடங்கியிருந்தான். வைராக்கியமுள்ளவன் ஜெபிப்பதற்கு பதிலாக நன்றாக தூங்குகின்றான். இந்நிலையிலே இயேசு அவர்களைப் பார்த்து ஏக்கமான கேள்வியைக் கேட்கிறார். இது பேதுருவுடைய நிர் விசாரமான தன்மையைக் காட்டுகின்றது. அதாவது தேவன் எதிர்பார்த்துக் கொடுத்திருக்கும் கட்டளைகளைக் குறித்து கவலைப்படாமல் அதற்கு எதிராக செயல்படுவது நிர்விசாரமான தன்மை ஆகும்.

இன்று நாம் ஜெபிக்காமல், வேதம் வாசிக்காமல், தேவாலயத்துக்கு வராமல் தேவனுக்கு தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடாமல் அழிந்து போகிற காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்போமென்றால் நாம் நிர்விசாரமான

நிலையில் இருக்கிறோம் என்பதைக்காட்டுகிறது. ரோம பெருநகரம் எரியும் போது மன்னன் நீரோ அதைக்குறித்து கவலைப்படாமல் வயலின் வாசித்துக் கொண் டிருந்தான். தேசம் எரிவதைக் குறித்து அவன் கவலைப்படவில்லை அல்லது பொருட் படுத்தவில்லை. இதேபோல் இன்றும் நாம் எமது தேசத்தின் யுத்த சூழ்நிலையை உணர்ந்து தேவனை நோக்கி ஜெபிக்காமல் இருப்போமென்றால் அது எமது நிர்விசாரத்தன்மையையே காண்பிக்கிறது. சிலர் கிறிஸ்தவ பிரமாணங்கள் வயது வந்தவர்களுக்கே, நாம் வாலிப காலத்தில் அனுபவிக்க வேண்டியதை அனுபவிக்க வேண்டும் எனக் கூறுவர், இல்லை! அருமையானவர்களே இப்படியான நிர் விசாரத்தன்மை எமக்குள் காணப்படவே கூடாது. இப்படியான எண்ணம் அதாவது நிர்விசாரத்தன்மை எமக்குள் காணப்படுமேயாகில் மறுதலிப்பதற்கான இரண்டாம் படியில் நிற்கிறோம். ஆகவே இதனைத் தவிர்த்து தேவனால் எப்போதும் உபயோகிக்கப்படக் கூடிய உற்சாகமான நல்ல பாத்திரமாய் வாழும் படியாக தேவனு டைய பிரமாணங்களை கட்டளைகளைக் கடைப்பிடித்து தேவனுக்காக வாழுவோம்.




இயேசுக்கிறிஸ்து தனது கடைசி துளி நேரங்களில் சீஷருடன் கூடச் சென்று ஜெபித்துக் கொண்டிருப்பதைக் பற்றி பார்த்தோம். இச் சந்தர்ப்பத்தில் பிரதான ஆசாரியர்களால் அனுப்பப்பட்டவர்கள் இயேசுவின் சீஷனாக இருந்த யூதாசின் வழிநடத்தலுடன் இயேசுவைப் பிடிக்க கெத் சமனே வருகின்றனர். வந்தவர்கள் இயேசுவை கைது செய்யமுற்பட்ட போது பேதுரு தன்னிடமிருந்த பட்டயத்தை எடுத்து சேவகன் ஒருவனின் காதை வெட்டி இயேசு வைக் காப்பாற்றலாம் என்ற முனைப்புடன் செயல்படுகிறான். (யோவான் 18: 10)

**ஒப்புக் கொடுத்தலுக்கு பதிலாக போராடுகிறான். இப்படியான தேவையற்ற துணிச்சலே பேதுருவின் வீழ்கைக்கு காரணமாகிறது.**

ஏற்கனவே இயேசுக்கிறிஸ்து தான் மரணத் தைப் பற்றி கூறி அதற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தார் என்பதை அறிந்திருந்தும். தன்னைச் சுற்றிலும் ஏராளமான போர்ச் சேவகர்கள் நிற்கிறார்கள் என்று தெரிந்திருந்தும் தனித்து நின்றுதேவசித்தமென்று தெரிந்ததை. எதிர்க்க முற்பட்டதே பேதுருவின் முட்டாள்தனமான துணிச்சலாக மாறுகிறது. இங்கு கிறிஸ்துவின் சித்தத்திற்கு கீழ்படிவதற்கு பதிலாக எதிர்த்துப் போராடுகிறான். உம்மோடு கூட மரிக்க ஆயத்தம் என கூறியவன் தன்னைக் காத்துக் கொள்ள முயற்சி பண்ணுகிறான். ஒப்புக்

கொடுத்தலுக்கு பதிலாக போராடுகிறான். இப்படியான தேவையற்ற துணிச்சலே பேதுருவின் விழுகைக்கு காரணமாகிறது.

ஆம் இன்றும் நாம் அறிந்திருக்கும், அறிவிக்கப்பட்டிருக்கும் தேவசித்தங்களை நன்றாக புரிந்திராததும் அதனை கருத்தில் கொள்ளாத ஜீவியம் ஜீவிக்கும் பொழுது அல்லது தேவசித்தத்துக்கு எதிர்த்து போராடும் போது அல்லது இன்னொருவருடைய வாழ்க்கையில் உள்ள தேவசித்தத்தை தடை பண்ணும் போதெல்லாம் ஒரு அசாதாரண முட்டாள்த்தனமான ஒரு துணிச்சலுடன் நாம் செயல்படும் போது விழுகைக்கு ஆயத்தமான நிலையில் இருக்கின்றோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். விட்டுக்கொடுத்தலுடன் கூடிய ஒப்புக் கொடுத்தலின்றி சண்டை போடுவதும் உரிமைக்குரல் கொடுத்தலும் கிறிஸ்தவ வாழ்வின் விழுகைக்கான படிகள் என்பது யதார்தமான உண்மை. ரோமர் 12:17இல் ஒருவருக்கும் தீமைக்குத்தீமை செய்ய வேண்டாம் என தெளிவாகக் காணலாம். எனவே எப்போதும் நன்மை செய்பவர்களாக நாம் காணப்பட வேண்டும்.




மூடத்தனமான துணிச்சலை சற்றுமுன் வெளிப்படுத்திய பேதுரு நிலமை மோசமானதாக மாற மற்ற சீஷர்களுடன் தானும் ஓடிப் போனான் எனக் காணலாம். மத்தேயு 26:56 சீஷர்கள் எல்லோரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள் என வாசிக்கிறோம். எந்த சூழ்நிலையிலும் பின்பற்றுவேன், இடறலடையேன் என வீராப்பு பேசிய பேதுரு மீறமுடியாத ஆபத்து என்று கண்டவுடனே தான் பின்பற்றிய தலைவனை தனித்து விட்டு விட்டு தன் ஜீவன் தப்பினால் போதும் என்று ஓடிவிட்டதைக் காண்கின்றோம். இந்த நிலை அவன் இயேசுவை மறுதலிக்கவும், சபிக்கவும் வைத்தது. ஒரு பின்மாற்றான நிலையை உருவாக்கியது.

பிரியமானவர்களே, இதை வாசித்துக் கொண்டிருக்கும் போது, உங்கள் கடந்தகாலத்தை சற்று பின்நோக்கிப் பார்த்தால் இந்த பேதுருவைப் போல் நாமும் தீர்மானங்கள், உடன்படிக்கைகள், வைராக்கியமான முடிவுகள் எடுத்து கிறிஸ்துவிற்கு எம்மை அர்ப்பணித்திருப்போம். என்ன வந்தாலும் எது நடந்தாலும் விடமாட்டோம். ஸ்தோத்தரிப்போம் எனக் கூறியிருப்போம். எனினும் ஆபத்தான சூழ்நிலைகள் எமக்கு வந்த போது கிறிஸ்துவை விட்டு கிறிஸ்தவ வாழ்வை விட்டு தூரம் சென்றிருக்கிறோம். எமது ஜெப தியான வேளைகளை மறந்திருக்கிறோம். ஆராதனைகளை அலட்சியம் செய்திருக்கிறோம். இவைகள் விழுதலுக்கான படிகளில்

நிற்கிறோம் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. தப்பும் நோக்குடன் கிறிஸ்தவ வாழ்க்கையை பாதிக்கக் கூடிய எத்தனை பொய்கள், இவைகள் நாம் எம் ஆத்துமாவைக் குறித்து அக் கறைப்படாமல் சரீரத்தைக் குறித்து கவலைப்படு கிறோம் என் பதையே காட்டு கின்றது. சரீரத்தைக் குறித்து அல்ல ஆத்துமாவைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாக இருப்போம். அதுவே நாம் விழுந்துவிடாமல் எம்மைத் தப்புவிக்கிறதாக இருக்கும். கிறிஸ்துவிற்காக பரிசுத்த வாழ்க்கைக்காக மரிக்கவும், ஆயத்தமான நிலையில் நாம் எம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே பேதுருவைப் போல ஆபத்தைக் கண்டு ஓடுகிறவர்களாக இராமல் கிறிஸ்துவிற்காக நிற்க எம்மை அர்ப்பணிப்போம்.

> **தப்பும் நோக்குடன் கிறிஸ்தவ வாழ்க்கையை பாதிக்கக் கூடிய எத்தனை பொய்கள், இவைகள் நாம் எம் ஆத்துமாவைக் குறித்து அக்கறைப்படாமல் சரீரத்தைக் குறித்து கவலைப்படுகிறோம் என்பதையையே காட்டுகின்றது.**




இயேசுவை விட்டு ஓடிப்போன பேதுரு அவருக்கு சம்பவிப்பதை அறியும் படிக்கு தூரத்திலே பின்பற்றினான். என மத்தேயு 26:38 இல் காணக்கூடியதாக இருக்கிறது. எந்தச் சூழ்நிலையிலும் உம்மைப் பின்பற்றுவேன். என மார்தட்டி உறுதிப்படக்கூறியவன் விரும்பாதவனாக தனக்கு ஆபத்து வராதபடிக்கு தூரத்திலே இயேசுவை பின்பற்றுகிறான். இயேசுவுக்கு சமீபமாக அவரை பெலப்படுத்த வேண்டியவன் தூரத்திலே பின்பற்றுகிறான். இந்நிலையும் அவனுடைய விழ்ச்சிக்கு காரணமாகிறது.

இன்றும் அநேகர் கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றனர் இது உண்மை. எனினும் நெருக்கமாக அல்ல. தூரத்திலே பின்பற்றுகின்றனர். இதுவே வேதனை தரும் விடயமாக இருக்கிறது. ஏனெனில் கிறிஸ்துவுடன் உள்ள உறவு நெருக்கம் என்ற ஒரு இடைவெளியை எமக்குள் கொண்டு வரும். இதன் விளைவாகவே ஆலயத்துக்கு நேரம் தாழ்த்தி வருதல். ஆராதனை முற்றுப் பெறுவதற்குள் கடந்து செல்லல். வேறு தேவ காரியங்களில் பங்கெடுக்க விருப்பமின்மை. போதகரை சந்திக்காமல்

விலகி நடத்தல். தம்முடைய நிலைகள் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக எந்த நிலையில் (பாவமான) இருந்தாலும் திருவிருந்தில் பங்கெடுத்து தம்மை பரிசுத்தவான்களாகக் காட்டிக் கொள்வர். ஆராதிக்கும் நோக்கோடு ஆலயம் வராமல் கடமைக்காக வருதல், போன்ற காரியங்கள் வாழ்க்கையில் வெளிப்படு கின்றன. இவைகள் தூரத்திலே பின்பற்றுவதற்கான சில உதாரணங்கள்.

ஆம் அருமையானவர்களே இன்று உங்கள் வாழ்வு எப்படியிருக்கிறது. நெருக்கமான உறவு கிறிஸ்துவுடனே காணப்படுகிறதா. இல்லையென்றால் விழுந்து போகும் விளிம் பில் நிற்கிறீர்கள். நீங்கள் யாராக இருந்தாலும் இதை வாசிக்கும் பொழுது விளிம்பில் இருந்து நகர்ந்து கிறிஸ்துவுடன் ஐக்கியம் கொண்டு தொடர்ந்து அவருடனான உறவை நெருக்கமானதாகவும் பிரிக்க முடியாததாகவும் மாற்றிக்கொள்ளுங்கள்.




இயேசுவை யார் எதிர்த்தார்களோ, இயேசுவை யார் சிலுவையில் அறையும் படி வீறு கொண்டு எழுந்தார்களோ அவர்களுடன் பேதுருவும் ஒட்டிக் கொள்ளுகின்றான். இயேசு வேதனை அனுபவிக்கிறார் இயேசுவுடன் மரிக்கவும் தயார் என கூறிய பேதுரு இந்த இயேசுவை எதிர்த்தவர்களுடன் சேர்ந்து குளிர்காய்ந்து கொண்டிருக்கிறான். யோவான் 18:18இல் இதனை காணலாம். இயேசுவுக்கு எதிரிகள் எமக்கும் எதிரிகளே. இந்த நிலையில் இருந்து பேதுரு தவறியமையினால் அவன் விழுந்து போவதற்கு ஏதுவாக அமைந்தது.

**இயேசுவுக்கு எதிரிகள் எமக்கும் எதிரிகளே.**

ஒரு கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் அந்தக் கணவனை ஒருவன் கொலை செய்து விட்டான். அடுத்த நாள் அந்த மனைவி தன் கணவனை கொன்ற அந்த நபரை திருமணம் முடித்து கை கோர்த்து நடக்கின்றாள். இப்படிப்பட்ட பெண்ணுக்கு மிகவும் பொருத்தமான பெயர் ''துரோகி'' ஆகும்.

இவ்வாறே மணவாட்டிகளாகிய நாமும் மணவாளன் இயேசுவை விட்டுவிட்டு அவரை சிலுவையில் அறைந்த உலகத்துடன் கைகோர்த்து நடப்போமானால் எமக்கும் சூட்டப்படக்கூடிய மிகவும் பொருத்தமான பெயர் ''துரோகி'' என்பதே.

> **இவ்வாறே மணவாட்டிகளாகிய நாமும் மணவாளன் இயேசுவை விட்டுவிட்டு அவரை சிலுவையில் அறைந்த உலகத்துடன் கைகோர்த்து நடப்போமானால் எமக்கும் சூட்டப்படக்கூடிய மிகவும் பொருத்தமான பெயர் ''துரோகி'' என்பதே.**

ஆம் பிரியமானவர்களே எமது நண்பர்கள் யார்? சற்று சிந்திப்போம்...! சங்கீதம் 119:63 ''உமக்கு பயந்து உமது கட்டளைகளை கைக்கொள்ளுகிற அனைவருக்கும் நான் தோழன'' இதனடிப்படையிலா எமது நண்பர்கள் எமக்கிருக்கிறார்கள்.

உலகத்திலிருந்து வேறு பிரிக்கப்பட்டு அவருக்காக பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழவென தேவன் எம்மை பிரித்து எடுத்துள்ளார். எனவே முற்றுமுழுவதுமான தேவ சித்தம் செய்கிறவர்களாகவே நாம் இருக்க வேண்டும். உலகத்தோடு ஒத்து ஓட முடியாது. கிறிஸ்துவினுடையவர்கள் தான் எமது நண்பர்களாக இருக்க வேண்டும். அதுவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ எம்மை நடத்தும். உலகத்துடன் கைகோர்த்து நடப்போமென்றால், வேண்டாத உறவு நம் வாழ்க்கையில் காணப்படுகின்றது என்றால் அதுவும் வேண்டாத உறவே. மேலும் தேவ மனிதனின் ஆலோசனைகளைப் பார்க்கிலும் உலக மனிதர்களின் ஆலோசனைகள் இனிப்பாக இருக்கிறதா. அப்படியாயின் நாம் உலகத்துடனேயே கைகோர்த்துள்ளோம். அதுவே வேண்டாத உறவு.

இப்படியாக நாம் தேவனுக்குரியதல்லாதவைகளை எம்மகத்தே கொண்டிருக்கும் போது நாம் வேண்டாத உறவு வைத்திருக்கின்றோம். இவையாவும் எம்மை எமது கிறிஸ்தவ வாழ்வில் பின்மாற்றமான நிலைக்கு கொண்டு வந்து விடும். எனவே எச்சரிக்கையடைவோம்.

நாம் மேலே பார்த்த ஆறு காரியங்களும் பேதுரு இயேசுவை மறுதலிக்க காரணமாயிருந்தது. மேற்படி காரியங்களில் இருந்து எமது வாழ்வையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். என தேவனே விரும்புகிறார். இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பானவர்களே இன்று உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வு பின்மாற்றம் அடைந்த நிலையில் இருக்கின்றதா, என ஆராய்ந்து பாருங்கள் விழுந்து போவதற்கான விளிம்பில் நின்றால் இன்றே தேவனுடன் ஒப்புரவாகுங்கள். கிறிஸ்தவ வாழ்வு நாளுக்கு நாள் முன்னேற வேண்டும். அதுவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை. ஆரம்பித்த இடத்திலேயே இருக்குமானால் அல்லது பின்னோக்குமானால் பின்மாற்றமடைந்த நிலையிலே வாழ்க்கை இருக்கிறது. என்பதை புரிந்து கொள்ள வேண்டும். பேதுருவைப் போல் நாமும் தவறிவிடாதபடி தேவன் ஓர் எச்சரிப்பின் சத்தத்தை இதனூடாக தருகிறார். எச்சரிப்பை பெறும் நாங்கள் அலட்சியமுடை

> **கிறிஸ்தவ வாழ்வு**
>
> **நாளுக்கு நாள் முன்னேற வேண்டும். அதுவே வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை**


யவர்களாக அல்ல. எம்மிடம் காணப்படும் குறைவுகளை அந்தரங்க பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிட்டு தேவன் பார்ப்பதன் படியானதொரு வாழ்க்கை அதாவது தேவ சித்தத்தை நிறைவேற்றும் ஒரு வாழ்க்கை வாழ எம்மை அர்ப்பணிப்போமாக.

ஏனெனில் பேதுரு தான் பின்மாற்றமடைந்து மறுதலித்ததை உணர்ந்த போது கண்ணீருடன் தேவன் பக்கம் திரும்பி தன் பாவங்களுக்காக கதறினான். மனங்கசந்து அழுதான். இது ஓர் உண்மையான இதயத்தில் இருந்து குற்றங்களை உணர்ந்து இதயத்திலிருந்து மனந்திரும்ப ஆயத்தமான நிலையில் தன்னை ஒப்புக்கொடுத்தவனிடமிருந்து வந்தது. இதனால் அவன் கதறிய சத்தத்தைக் கேட்ட தேவன் அவனுக்கு இரங்கி மன்னித்து ஏற்றுக்கொண்டது மாத்திரமல்ல ஆடுகளை, ஆட்டுக் குட்டிகளை மேய்க்கும் பொறுப்பு கொடுக்கப்பட்டது.

இதே வண்ணமாக நாம் மனந்திரும்பும் போது தேவன் எம்மை ஆறுதல்படுத்தி குறைவுகளில் இருந்து வெளியே கொண்டு வந்து உன்னத ஆசீர்வாதங்களை தருவதோடு மாத்திரமில்லாமல் தன்னுடைய பணியை தொடரவோ அல்லது செய்யவோ ஆணை தந்து வழிநடத்துவதை காணலாம்.

ஆகவே அகங்காரம்
நிர்விசாரம்
மூடத்தனமான துணிச்சல்
ஆபத்தில் ஓடுதல்
தூரத்தில் பின்பற்றல்
வேண்டாத உறவு போன்றவற்றை அகற்றி தேவனுக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து பின்மாற்றக்காரராய் அல்ல. இப்புதிய ஆண்டில் முன்னேறும் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வோம்.

தேவன் தாமே உங்களை
ஆசீர்வதிப்பாராக






கடந்த 30 ஆண்டுகள் விண்ணவரின் சித்தம் செய்து முடித்த சீயோனின் தலையாய் இருந்த இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையை ஏறெடுக்கின்றோம். சீயோன் தேவாலயம் என பெயர் மாற்றம் 1976 ஆம் ஆண்டு செய்யப்பட்டது. அன்று தொடக்கம் கடந்த 30 வருடகாலங்களும் அதற்காக மேய்ப்பனாக தேவனாலே ஏற்படுத்தப்பட்ட, 1972இல் "எழும்பி பிரகாசி" என்ற உன்னத அழைப்பை தேவனிடமிருந்து பெற்று அவர் பணிக்கென தன்னை அர்ப்பணித்த எங்கள் அருமைப் போதகர் J.K. பிலிப் அவர்கள் 07.11.1976 இல் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இன்றுவரை தேவனுடைய சித்தப்படி, கர்த்தரின் வசனத்தில் சபையை நடத்தி, பாவ வழி நிற்கும் மக்களுக்கு தேவனின் பரிசுத்தம் காண்பித்து, மந்தையை விட்டுப்பிரியா நல் மேய்ப்பனாய் மந்தைக்கு மாதிரியாய் நல்வழி காட்டி நிற்கும் மேய்ப்பனுக்காக தேவனுக்கு மகிமையுண்டாகட்டும்.

மந்தைகளுக்கு மேய்ப்பன் என்பது போல எம்மோடு நீர்
துன்பத்தில் எம் அருகில்
இன்பத்தில் எம் அருகில்
யுத்த காலத்தில் எம் அருகில்
சமாதான காலத்தில் எம் அருகில்
உம் பணியில் 30 ஆண்டுகள் அல்ல இன்னும் உம் மேற்பார்வையில் நாம் கவனிக்கப்படவே

## தொடரட்டும் உம் பணி வளரட்டும் தேவராஜ்ஜியம்

**மூப்பர், போதகர்கள், ஊழியர்கள்**
**விசுவாசிகள்.**
**சீயோன் தேவாலயம்.**

# இயேசு கிறிஸ்துவின் நேரடி தொலைபேசி இலக்கங்கள்!
# அழைப்புக் கட்டணம் இலவசம், !
# ஆச்சரியமல்லவா?

1) நீங்கள் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வேண்டுமா? அழையுங்கள்
ரோமர் 10:9

**2) உங்களைக் குறித்த தேவனின் திட்டத்தை அறிய வேண்டுமா? அழையுங்கள்**
**எரே - 1:5**

3) நீங்கள் கலங்கிப் போயிருக்கிறீர்களா? அழையுங்கள்
யோவான் 14

**4) மனிதர்கள் உங்களை கைவிட்டு விட்டார்களா? அழையுங்கள்**
**சங்கீதம் - 27**

5) நீங்கள் பாவத்தில் விழுந்து விட்டீர்களா? அழையுங்கள்
சங்கீதம் – 51

**6) கர்த்தரை விட உலகம் பெரிதாக தெரிகின்றதா? அழையுங்கள்**
**சங்கீதம் - 91**

7) ஆவிக்குரிய பாதுகாப்பு தேவைப்படுகின்றதா? அழையுங்கள்
ரோமர் 8: 1–30

**8) நீங்கள் கனி கொடுக்க விரும்புகின்றீர்களா? அழையுங்கள்**
**யோவான் - 15**

9) நீங்கள் உங்கள் விசுவாசத்தை அனல் மூட்ட விரும்புகின்றீர்களா? அழையுங்கள்
எபிரே – 11

**10) நீங்கள் எதிர்காலத்தை குறித்து கவலைப்படுகின்றீர்களா? அழையுங்கள்**
**மத் - 6: 25-34**

11) நீங்கள் ஆபத்து காலத்தில் உள்ளீர்களா? அழையுங்கள்
சங்கீதம் – 50 :15

**12) கர்த்தர் உங்களுக்கு தூரமாக தெரிகின்றாரா? அழையுங்கள்**
**சங்கீதம் - 139**

13) நீங்கள் தனிமையில் வாழ்கின்றீர்களா? அழையுங்கள்
சங்கீதம் : 23

**14) நீங்கள் வேலையின் நிமித்தம், பயணத்தின் நிமித்தம் வீட்டிலிருந்து வெளியேறும் போது அழையுங்கள் சங்கீதம் - 121**

15) உங்களுக்கு சாமாதானமும் இளைப்பாறுதலும் தேவைப்படுகின்றதா?
அழையுங்கள் மத் – 11: 28–29

**16) உங்கள் ஜெபங்கள் குறுகியதாகவும் சுயநலமிக்கதாயும் உள்ளதா?**
**அழையுங்கள் சங்கீதம் : 67**

17) அன்பைப் பற்றி அறிய வேண்டுமா? அழையுங்கள்

1கொரி 13

**18) நீங்கள் மன அழுத்தத்தில் உள்ளீர்களா? அழையுங்கள்**

**சங்கீதம் - 27**

19) ஒரு காரியம் செய்ய மனத்தைரியம் வேண்டுமா? அழையுங்கள்

யோசுவா 1

**20) பயந்து போனீர்களா? அழையுங்கள்**

**சங்கீதம் - 34-7**

21) பாவம் செய்யாமலிருக்க விரும்புகின்றீர்களா? அழையுங்கள்

சங்கீதம் 119 : 11

**22) பரிசுத்தமான வாழ்க்கைக்கான நியமங்களை அறிய வேண்டுமா?**

**அழையுங்கள் கொலே - 3**

23) ஆவிக்குரிய வரங்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா? அழையுங்கள்

1 கொரி 12

**24) சமூகச் சேவையில் ஈடுபடுகின்றீர்களா? / ஈடுபட விரும்புகின்றீர்களா?**

**அழையுங்கள் எபேசி - 2:10**

25) நீங்கள் ஆயிரமடங்கு ஆசீர்வதிக்கப்பட விரும்புகின்றீர்களா? அழையுங்கள்

உபாகமம் 1–11


எவரின் உதவியுமின்றி நேரடியாகவே அழைப்புக்களை மேற்கொள்ளலாம். வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் அழைப்புக்களை ஏற்படுத்தலாம்.

**ப. முரளி**

# வினா விடை 18 சரியான விடைகள்

1. தானியேல் தானி 10:5
2. சேபாவின் ராஜஸ்திரி 1இரா 10:13
3. ஆதாம், ஏவாள் ஆதி 3:7
4. ஐத்திகு அப் 20:9
5. அறிவு நீதி 2:10
6. ஆபிரகாம் ஆதி 17:3
7. மதிகேடாய் நடக்கிற ஸ்திரி நீதி 11:22
8. செப்பனியா 1:14
9. தீமோத்தேயு அப் 16:2
10. புறஜாதியார்

# வினாவிடை 18 சரியான விடைகள் எழுதியவர்கள்



1. மேரி கொன்ஷயா
2. தி. கலைக் குமரன்
3. நா. தர்ஷினி
4. மா. ஜஸ்மின்
5. இ. சுரேக்கா
6. மு. கௌரி
7. T. ஜெகா



# பக்தர்களின் பயிலகம்



-தொடர்ச்சி-

**கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர், இன்பரூபன் அவர்களின் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டது. பரலோகம் பற்றிய இந்த வேதப்படிப்பு இப்பகுதியில் தொடராக இடம்பெறும்.**

## 07. சுவர்ணரத்தினம்

ஆனால் இடை நடுவில் முளைவிட்டு எழும்பும் சில சம்பவங்கள் முழு அளவிலான ஓட்டத்தின் போக்கினையே மாற்றிவிடுகின்றது. சிமியோனின் காரியமும் இதுதான். ஆதி 34இல் ஓர் அவப்பட்ட செயல் சிமியோனின் தங்கைக்கு நடை பெறுகிறது. இந்த அதிகாரம் தேவன் அற்றதாக ஆரம்பமாகி தேவனற்றதாகவே முடிவடைகிறது. தேவனைப் பற்றிய உணர்வு இல்லாத இடத்தில் வேறு உணர்வுகள் நிச்சயம் தலை காட்டும். சிமியோனின் தங்கை தேசத்துப் பெண்களைப் பார்க்க புறப்பட்டாள். தேசத்துப் பெண்களைக் காணப்புறப்பட்டாள் என்பதற்குள் தன்னையும் காட்டச் சென்றாள் என்பது மறைந்து இருக்கின்றது. மேலுந் தேசத்துப் பெண்கள் என்பதற்குள் தேசத்து ஆடவர்கள் என்பதும் மறைந்திருக்கின்றது. இவ்விதமாக சென்றவளை சீகேம் கண்டு தீட்டுப் படுத்தினான். சிமியோன் தன் தங்கையைப் பாதுகாக்க வேண்டியது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது ஒன்று. அத்தோடு நிகழ்ந்த சம்பவத்தின் மீது நிதியான முறையில் கடுஞ்சின வெறுப்படைவதும் இயற்கை. ஆனால் இச் செயலுக்காக பழிவாங்க திட்டமிட்ட சூழ்ச்சிக் கொலைக்கு சாட்டுப் போக்கு கூறமுடியாது. இந்த சம்பவத்தின் பின்பு சீகேமின் தகப்பன் யாக்கோபோடு பேச வருகிறான். இச் சந்தர்ப்பத்தில் யாக்கோபு

**தேவனைப் பற்றிய உணர்வு இல்லாத இடத்தில் வேறு உணர்வுகள் நிச்சயம் தலை காட்டும்.**

தன் குடும்ப விவகாரங்களை நிர்வகிக்க தன் குமாரர்களிடம் விட்டு விட்டதைக் காணலாம். ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவனின் அதிகாரம் எப்போ கீழ் இறக்கப்படுகிறதோ அந் நேரம் முதல் காரி யங்கள் நலமாக இராது. இச் சந்தர்ப்பத்தில் யாக்கோப்பின் குமாரர் சீகேமின் தகப் பனுக்கு வஞ்சகமான மறுமொழி கொடுக் கிறார்கள். ஆதி 34:14–17, 24, 25, 30 சிமியோன், லேவி என்பவர்களுடைய இந்த இரக்கமற்ற கொடூரத்தை யாக்கோப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. தன் அதிகாரத்தை யாக்கோபு விட்டுக் கொடுத்தது உண்மை தான் ஆனால் அவர்களது செயலுக்கு அவர்களைச் சாடினான். யாக்கோப்பு சிமியோன், லேவி செய்த செயலை மறக்கவில்லை. அவனது கடைசி வார்த்தைகளைப் பாருங்கள் ஆதி 49:5,6,7 இவ்விதமாகக் கூறும் போது யாக்கோபு பிள்ளைகளின் வாழ்க்கைமீது சாபம் கூறவில்லை. மாறாக அவர்களது உக்கிரமான கோபத்தையும் கொடுமையான மூர்க்கத்தையுமே சபித்தான். நிகழ்ந்த சம்பவத்தை மனதில் வைத்து சிமியோனின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் இத் தீமையான உணர்வுகள் அவன் வாழ்வில் விளைவித்த விபரீதங்களைக் காணலாம். எண் 1:23இல் சிமியோன் புத்திரர் முதலாவதாக எண்ணப்பட்ட போது அவர்கள் தொகை 59300 பின் எண் 26இல் எண்ணப்பட்ட போது தொகை 22200. 37100 ஐ காணவில்லை. காரணம் ஆதி 49:7இன் படி சிமியோனின் கோபமும் மூர்க்கமும் யாக்கோபிலே அவர்களைப் பிரியவும், இஸ்ரவேலிலே அவர்களை சிதறவும் பண்ணிற்று.

**ஒரு குடும்பத்தில் குடும்பத்தலைவனின் அதிகாரம் எப்போ கீழ் இறக்கப்படுகிறதோ அந் நேரம் முதல் காரியங்கள் நலமாக இராது.**

யோசுவாவின் புத்தகத்தைப் பார்த்தால் அங்கும் சிமியோன் இன்னோர் ஆசீர்வாத இழப்பை அனுபவிக்கிறான். யோசு 19:1 இதன் படி இவனுக்கு தேசம் கிடைக்கவில்லை. யூதா புத்திரரின் சுதந்திரத்தின் நடுவே அவர்களுக்கு சுதந்திரம் கிடைத்தது. இதுமட்டுமா? இன்னுமோர் பெரிய இழப்பும் ஏற்பட்டது. மற்றைய கோத்திரங்களோடு சேர்ந்து அவன் பெயர் முதலாய் உச்சரிக்கப்படவில்லை. உபா 33 இல் மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதம் கூறும்போது சிமியோனின் பெயர் அங்கு காணப்படவில்லை. கோபமும் மூர்க்கமும் நம்மை பரிதாப நிலைக்குத்தள்ளும். அந்த கோபமும் மூர்க்கமும் நம்மிடம் இருந்தால் பரலோகத்தை கொள்ளையடித்து விடும். சிமியோனோடு சேர்ந்த லேவி தப்பினான் எப்படித் தெரியுமா? கர்த்தரின் பட்சத்தில் நிற்பவன் யார். என்ற கேள்வி மோசேயினால் கேட்கப்பட்டபோது. இது எப்போது கேட்கப்பட்டது தெரியுமா? ஜனங்கள் தங்களைக்

கெடுத்துக் கொண்டு இருந்த போது, இருக்கிறவராக இருக்கிறேன் என்ற நாமத்தையுடைய தேவனை மறந்தபோது. ஜனங்களை வழி நடத்த வேண்டிய ஆசாரியன் பின்மாற்ற, துன்மார்க்க ஜனத்தோடு தன்னை ஒன்றுபடுத்தி விட்ட போதாகும். அப்போது லேவி வந்து நின்றான். கர்த்தர் பட்சம் நிற்க வந்ததால் லேவி தப்பிப் பிழைத்தான். அடுத்து சித்தீமிலே இஸ்ரவேல் புத்திரர் முறை கெட்டு நடந்தார்கள். அப்போ லேவி கோத்திரத்தைச் சேர்ந்த பினெகாஸ் கர்த்தர் நிமித்தம் வைராக்கியம் காண்பித்தான் இதனால் தப்பினான். உங்களிடம் கோபமும் மூர்க்கமும் உண்டா? தீமையான உணர்வுகளோடு பரலோகம் செல்ல முடியாது. அதில் இருந்து விடுதலை அடைய கர்த்தர் பட்சமாய் வாருங்கள்.

கர்த்தருக்காக பக்திவைராக்கியம் காண்பியுங்கள் கர்த்தர் இரங்குவார். இதைக் குறித்து நீங்கள் அதிகம் சிந்தியுங்கள் "உக்கிரம் கொடுமையுள்ளது. கோபம் நிஷ்டூரமுள்ளது." நீதி 27:4 கோபத்தால் ஆளப்படுகிறவர்கள்அனேகர் கர்த்தருடைய ஜனங்களை கோபமல்ல தேவ சமாதானமே ஆள வேண்டும். கோபத்திற்கு இடங் கொடுத்ததினால் உண்டான கேடுகள் கொஞ்சமல்ல. அவன் கொஞ்சம் முற்கோபி மற்றப்படி மிகவும் நல்லவன் கோபமுள்ள இடத்தில்தான் குணம் உண்டு இப்படி உலகத்தார் கூறுகிறார்கள். தேவன் சொல்வதைப் பாருங்கள். நீதி 14:17 "முற்கோபி மதி கேட்டைச் செய்வான் " மூடரின் நெஞ்சிலே கோபம் குடி கொள்ளும் பிர 7:9 கோபமுள்ள இடத்திலே குணமுண்டென்கிற விஷயமும் நாம் அறியாதது அல்ல. கோபத்தில் பிள்ளைகளை காலின் கீழ் மிதித்து உதைத்து – குணத்தில் இனிப்பு வாங்கிக் கொடுப்போம். கோபத்தில் மனைவியின கையை முறித்துவிட்டு – குணத்தில் புடவை வாங்கிக் கொடுப்போம். கோபத்தில புருஷனை வாயில் வந்தபடி எல்லாம் திட்டிவிட்டு – குணத்தில் சாப்பிட வாங்கோ என்போம். இப்படி ஏமாற்றுகிறதான விஷயங்கள் அனேகம் உண்டு. ஒன்று நிச்சயம் " சினந்ததால் அறுத்த மூக்கு சிரிப்பதால் ஒட்டாது." கோபம் பேசத் தகாத வார்த்தைகளை வாயில் பிறப்பிக்கும். செய்யக் கூடாத காரியங்களை செய்யப்பண்ணும். கோபம் முக அழகைக் கெடுக்கும். சரீரத்தில் சோர்வை உண்டாக்கும். மிஞ்சின கோபத்தால் தற்கொலை செய்து கொண்டவர்கள் அனேகர்.

எனவே, முற்கோபத்திற்கும் பிற்கோபத்திற்கும் இடம் கொடுக்கவே கூடாது. ஆகையால் சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. எபே 4:31

இதுவே தேவ கட்டளை எதிர்த்துப் பேசாமல் கீழ்ப்படிய வேண்டியது நம் கடமை. அப்போ பரலோகம் நமக்குச் சொந்தமாகும்.

# கதையும் கற்றதும்

## சிருஷ்டிகரின் சித்தம்

அந்த அழகான பென்சிலை தனது கையிலே ஏந்தியவராய் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார் அதனை வடிவமைத்தார்.

" நான் உன்னை இந்த பரந்த உலகிற்குள் அனுப்பும் முன்பு உனக்கு கூற வேண்டிய ஐந்து உண்மைகள் உள்ளன. அந்த ஐந்து காரியங்களையும் நீ எப்போதும் உன் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால், நீ ஒரு சிறந்த பென்சிலாக திகழ்வாய" என்று தான் உருவாக்கிய பென்சிலைப் பார்த்துக் கூறினார் அந்த நபர்.

**முதலாவது:**
உன்னால் பல சிறந்த காரியங்களை சாதிக்க முடியும்... ஆனால் நீ உன்னை ஒருவருடைய கையிலே ஒப்படைத்து அவரில் சார்ந்திருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்.

**இரண்டாவது:**
காலத்திற்குக் காலம் நீ கூர்மையாக்கப்படும் போது அதிக நோவையும் வேதனையையும் அனுபவிப்பாய். ஆனால் நீ ஒரு சிறந்த பென்சிலாக திகழ இது அவசியமான தொன்றே!!

**மூன்றாவது:**
நீ விட்ட தவறுகளை மீள திருத்தியமைக்கக் கூடிய வல்லமை உன்னிடம் உண்டு, மறந்துவிடாதே!

**நான்காவது:**
நீ உன் உள்ளே வைத்திருப்பதே உன் மூலமாக வெளிப்படும்.

**ஐந்தாவது:**
நீ எந்த மாதிரியான நிலமையில் உன் பணியைத் தொடர வேண்டுமோ அதில் உறுதியாயிரு. அது எவ்வகையான கடினமான நிலையிலும் எப்போதும் ஒரு தெளிவான, சிறந்த அடையாளத்தை பதித்துக்கொள்.

அந்த புதிய பென்சில், தன்னை வடிவமைத்தவர் கூறிய காரியங்களை விளங்கிக் கொண்டு, அவற்றைப் பின்பற்றுவதாக உறுதி கூறி, தனது சிருஷ்டிப்பின் நோக்கத்தை நிறைவு செய்வதற்காக உலகினுள் செல்லத் தயாரானது.........

ஆம்! அந்த பென்சிலின் ஸ்தானத்தில் நாம் எம்மை நிறுத்தி ஆராய்வோம். அதே ஐந்து காரியங்களையும் நாம் செயற்படுத்த வேண்டும் என்பது தான் எமது சிருஷ்டிகரின் சித்தமும் கூட.

**முதலாவது:**
எம்மால் பல காரியங்களை செய்ய முடியும், அதற்கு தேவனது கரங்கள் எம்மை ஏந்து

வதற்கு நாம் அனுமதிக்க வேண்டும். அத்தோடு எம்மிடமுள்ள தாலந்துகளை தேவ மகிமைக்காக பாவிக்க எம்மை விட்டுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் எம்மைக் கொண்டு தேவன் தனது காரியங்களை எழுதவும், நிலைப்படுத்தவும் முடியும்.

**தேவனது கரங்கள் எம்மை ஏந்து வதற்கு நாம் அனுமதிக்க வேண்டும்.**

**இரண்டாவது:**

பலவிதமான சோதனைகள், இழப்புக்கள், தீமையான பேச்சுக்கள் எம்மை வேதனை யான நோவுமிக்க நிலைமைக்குள்ளாக கொண்டு செல்லலாம். ஆனால் அந்த கூர்மையாக்கும் காலத்தை தேவனின் உன்னத பலத்தோடு நாம் கடந்தால் அதிக செயற்திறனுள்ள ஆசீர்வாதமான வாழ்வை நாம் பெறலாம்.

**கூர்மையாக்கும் காலத்தை தேவனின் உன்னத பலத்தோடு நாம் கடந்தால் அதிக செயற்திறனுள்ள ஆசீர்வாதமான வாழ்வை நாம் பெறலாம்.**

**மூன்றாவது:**

நாம் செய்யும் தவறுகளை தேவபெலத்தோடு திருத்தியமைக்க வேண்டும். மன்னிக்கத் தயை பெருத்த தேவனின் கரங்கள் அவரை நோக்கி மன்னிற்பிற்காக ஏங்கும் உள்ளங்களை ஒரு போதும் அல்லத்தட்டுவதில்லை.

**நான்காவது:**

எம்முள்ளே தேவ அன்பை, தயவை, சாந்தத்தை, தாழ்மையை வைத்துக் கொள்ள வேண்டும். அப்போது அவை எம்மூலமாக வெளிப்படும், ஒவ்வொரு கணமும் எம் வாழ்வினூடாக எழுதப்படும விடயங்கள் இயேசுவை வெளிக்கொணர வேண்டும். எமக்குள் இயேசுவின் பிரசன்னம் இருந்தால் எம்மூலம் வெளிப்படுவதும் இயேசுவின் தன்மைகளாகவே இருக்கும்.

**நாம் செய்யும் தவறுகளை தேவபெலத்தோடு திருத்தியமைக்க வேண்டும்.**

**ஐந்தாவது:**

நாம் கடந்து செல்லும் பாதைகளிலெல்லாம் எமது சாட்சியைப் பதிக்க வேண்டும். அது எத்தகைய இருள்சூழ்ந்த நிலையாய் இருப்பினும் தேவனை சேவிப்பதில் நாம் தளரக்கூடாது. இயேசுவுக்காக சாட்சியாக நின்று ஒரு தெளிவான முத்திரையை தேவ மகிமைக்காக ஏற்படுத்த வேண்டும்.

**ஒவ்வொரு கணமும் எம் வாழ்வினூடாக எழுதப்படும் விடயங்கள் இயேசுவை வெளிக்கொணர வேண்டும்.**

ஆம்! நாம் எல்லோரும் ஒரு பென்சிலைப் போல ஒரு சிறந்த, தனித்துவமான நோக்கத்திற்காக சிருஷ்டிக் கப்பட்டோம். எனவே எமது சிருஷ்டி கரின் நோக்கத்தை உணர்ந்தவர்களாய் எம் வாழ்வை நெறிப்படுத்துவோம். அந்த சிருஷ்டிகரின் சித்தத்தை நிறை வேற்ற இந்த புதிய ஆண்டில் எத்தனிப்போம்!

**நாம் கடந்து செல்லும் பாதைகளிலெல்லாம் எமது சாட்சியைப் பதிக்க வேண்டும்.**

"நீ பெரிய காரியங்களைச் செய்யவே சிருஷ்டிக்கப்பட்டாய்"

**- கெ. இன்பரூபன் -**




# யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய் போவான்?

**Whom shall I send, and who will go for us?**

அனுப்பப்படுதல் என்பது அடங்கியிருத்தலோடு மிகவும் நெருங்கிய ஒன்றாகும். எனக்கு அருமையான வாலிப சகோதர, சகோதரியே இப்புதிய ஆண்டில் தேவன் உன்னிடத்தில் கேட்பது எல்லாம் அந்தகாரத்தின் ஆதிக்கத்தில் அமிழ்ந்து கொண்டிருக்கும் உன் சக நண்பன், நண்பியை (கிறிஸ்துவை அறியாமல் மரித்துக் கொண்டிருப்போரை) ஆச்சரியமான ஒளியிடத்தில் அழைத்து வருவதற்கு நீ அடங்கியிருப்பாயா?

தேவனுடைய காரியமாய் போவது என்னும் போது நீ பல காரியங்களைக் குறித்து குழப்பமடையாதே. எனக்கு பிரசங்கம் பண்ண தெரியாதே, பாடதெரியாதே, என் பேச்சு அவ்வளவு சரியாய் இல்லை, ஆங்கில மொழி எனக்கு தெரியாதே, என்னிடம் கடவுச்சீட்டு இல்லையே, வேத அறிவு போதாதே, நாட்டு சூழல் சாதகமாய் இல்லையே, குடும்பநிலைமிகவும் நஸ்ரமாயிருக்கின்றதே, எங்கே போவது தேவனே உமக்கு எல்லாம் தெரியுமே இவற்றை சரிசெய்து கொண்டு (வளர்ச்சியடைந்து) உம்சித்தப்படி நான் உமக்கு பணி செய்வேன். இப்போது என்னை தயவாய் மன்னியும் என்று சொல்லி. உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவஆட்டுக்குட்டியானவரின் தொனியை உன் வாழ்வில் அணைய விடாதே.

நமது இரட்சகராகிய இயேசுவும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்று வதற்காகவே முப்பது வயதுவரை குடும்பத்திற்கு அடங்கியிருந்தார். தகப்பனின் தச்சுத் தொழிலையே அவரும் செய்தார், சொந்த சகோதரர்களிடம் இருந்துவரும் மாறாட்டமான வார்த்தைகளை அவர் எதிர்த்து சண்டை போடவில்லை, உனக்கு வந்த, வருகின்ற, வரப்போகின்ற அனைத்து விதமான சோதனைகளுக்கும் இயேசுவும் முகம் கொடுத்தார் என்பதை மறந்து போகாதே. அதிகாரங்களுக்கு அடங்கியிருந்தார். ஆலய பண்டிகைக்கு பெற்றோருடன் சென்றார் – நீ எப்படி?

பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியது (பிதாவின் சித்தம்) என்று அறியீர்களா என உரைத்த இயேசு அடுத்து உடனடியாக அவர் செய்த செயலே மேலானதும் நாம் கடைப்பிடிக்க வேண்டியதும். பெற்றோருடனே கூடப்போய் நசரேத்தூரில் சேர்ந்து அவர்களுக்கு அடங்கியிருந்தார்.

பிற்பாடுதான் இயேசு தனது வெளியரங்க ஊழியத்திற்கு பிதாவினால் அனுப்பப்பட்டார் ஆச்சரியமில்லையே இயேசுவும் கூட கீழ்ப்படிதலை பாடுகளினாலே கற்றுக் கொண்டார். நீ கீழ்ப்படிதலைக் கற்றுக் கொள்வதற்கு உனக்குவரும் பாடுகள் உன்னை உர மேற்றுகின்றன. என்பதை மறவாதே. எப்போதும் அவரின் பலத்த கைக்குள் அடங்கியிரு. நீயும் அடங்கியிருக்கும் போது மாத்திரமே தேவ சித்தத்தை உன் வாழ்வில் கேட்க முடியும் மட்டுமல்ல சரியான ஓர் தீர்மானத்துக்குள் உன் வாழ்வை நகர்த்த முடியும்.

அழிந்து போகும் ஆத்துமாக்கள் மேல் தேவன் ஏக்கமுள்ளவராக தொனித்துக் கொண்டே இருக்கின்றார். ‘‘யார் நமது காரியமாய் போவான்? நீ அவருக்காக ஏதாவது ஒருகாரியத்தை ஏன் செய்யக் கூடாது.

தேவ சத்தம் கேட்டு கீழ்படிந்து தங்கள் வாழ்வு கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்ட நிச்சயமுள்ளவர்களாய் அவருக்குள் அடங்கியிருந்து ஆத்துமாக்களை எங்களுக்கு தாரும் என்ற ஒரே நோக்கத்துடன் புறப்பட்டுச் சென்ற மிஷனெரிகள்

## சார்ஸ் பின்னி

சார்ஸ் கிராண்டிசன் பின்னி இவரது பெயரின் அர்த்தமே எழுப்புதலாகும். இவர் 1792ல் பிறந்தார். இளமையில் கிறிஸ்துவை அறிந்து கொள்ள எவ்வித வாய்ப்புமில்லை. குடும்பநிலை மிகவும் வறியது. குடும்பத்திலுள்ள மற்றவர்களும் பக்தியுள்ளவர்களல்ல. தேவ கிருபையால் தனது இருபத் தொன்பதாவது வயதில் ஒரு வேதாகமத்தை வாங்கினார். சட்ட கல்லூரி சென்று சட்டம் பயின்றார். தேவ அன்பு இவருக்குள் பெருக்கெடுத்து ஓடியபடியால். தனது வழக்கறிஞர் தொழிலை விட்டு தேவபணியில் இறங்கினார், தேவன் பயன்படுத்தும் வல்லமையான கருவி யானார். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், தேவனுக்காய் தீப்பிளம்பாக செயலாற்றி அனேக ஆத்துமாக்களை கத்தரிடமாக வழிநடத்தினார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அப்போஸ்தலன் என்று சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றார். தனது 83 ஆவது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இந்த 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இப்படிப்பட்ட சார்ஸ் பின்னியாக ஏன் நீ எழும்பக் கூடாது.

## கிளாடிஸ் ஆல்வார்டு

‘‘மிக சிறிய பெண்மணி என்றும் இங்கிலாந்தின் சிட்டுக்குருவி’’ என்றும் செல்லமாக அழைக்கப்படும் கிளாடிஸ் 1902ம் ஆண்டு இங்கிலாந்தின் லண்டன் நகரின் வடக்கு

பகுதியில் வசித்து வந்த ஆல்வார்டு தம்பதிகளுக்கு முதல் மகளாய் பிறந்தார். பதின்நான்கு வயது நிரம்பிய கிளாடிஸ் படிப்பை நிறுத்திவிட்டு குடும்பவருவாயை அதிகரிக்க ஓர் வேலையில் அமர்ந்தாள். வாலிப பெண்ணுக்குரிய பாணியிலே வரும் வரும் காலத்தில் நடிகையாக மாற வேண்டும் எல்லோரையும் மகிழ்விப்பேன் என எண்ணியிருந்தாள்.

ஒரு நாள் இலக்கின்றி தெருவிலே சென்றபோது சில பெண்களினால் ஆலயத்திற்கு அழைத்து செல்லப்பட்டாள். தேவ வசனத்தினால் தொடப்பட்டு இரட்சிப்பை கண்டடைந்தாள். கோடிக் கணக்கான மக்கள் சீனாவிலே கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப் படாமல் இருப்பதை அறிந்த கிளாடிஸ் பேச்சு, மூச்சு எல்லாமே சீனாவுக்கு போக வேண்டும். குடும்பத்தினரிடம் விடைபெற்று புறப்பட்டாள். மிகவும் கஸ்ரப்பட்டு இரஷியாவுக்கு சென்றாள் அங்கு அவளை தடுப்பு காவலிலே வைத்துவிட்டனர். மனம் தளராமல் தேவனை நோக்கி மன்றாடினார். யப்பான் போவதற்கு வழியுண்டானது பின் இறுதியாக தான் எண்ணியிருந்த சீனாவை அடைந்தாள். கர்த்தருக்காக 38 ஆண்டுகள் சீனமக்களை கிறிஸ்துவிடம் நடத்தினார். எத்தனை கோடி ஆத்துமாக்கள் தொடப்பட்டன என்பது நித்தியத்திவ்தான் கணக்கிடப்படும்.

அன்பு சகோதர, சகோதரியே நீ ஓர் கிளாடிஸ் ஆகமாட்டாயா?

## மேரி ஸ்லேசர்

இவர் 1848ம் ஆண்டு ஸ்காட்டாந்து தேசத்தில் ஓர் ஏழைக் குடும்பத்தில் இரண்டாவது மகளாக பிறந்தாள். தந்தையோ பயங்கர குடிகாரன். தாய் பக்தி நிறைந்த பெண். தந்தை காலணி தைக்கும் கடையில் வேலை செய்தார். கிடைக்கும் பணத்தை குடிப்பதிலே செலவு செய்தார். பதினொரு வயதே நிரம்பிய மேரி ஒருமில்லில் வேலை தேடி பெற்றுக் கொண்டாள் தாயின் கனிவான போதனையினால் கிறிஸ்துவைப் பற்றியும், அவரது அன்பை பற்றியும் அதிகம் நாட்டம் உடையவளானாள். ஆபிரிக்காவுக்கு செல்ல உந்தப்பட்டவளாக பல ஆயத்தங்களை மேற் கொண்டாள் தன்னை ஓர் மிஷனெரியாக அர்ப்பணிக்க தீர்மானித்தாள்.

இருண்ட கண்டமென அழைக்கப்படும் ஆபிரிக்கா ஒருவருக்கு ஒருவர் சண்டையிடுவதும். அடிமைகளை கேடாய் நடத்துவதும். இளம் பெண்களை அடிமைத் தாரங்களாக விற்கப்படுவதையும் மேரிகண்டு வியந்து போனாள். குடித்து, வெறித்து இரவு முழுவதும் நடனம் பண்ணுவதும், பிசாசுகளின் சத்தியால் அசுத்த காரியங்களில் ஈடுபடுவதும் ஒருத்திக்கு இரட்டை பிள்ளை பிறந்தால் அந்த பிள்ளைகளைக் கொன்று விடுவார்கள். கிராமத் தலைவன் மரித்தால் மனைவியையும் பிள்ளைகளையும் வெட்டி புதைத்து விடுவார்கள்.

இவை அனைத்தையும் தெளிவாக அறிந்தும் மேரி கிறிஸ்துவின் சிலுவை மரணத்தால் உண்டான நித்திய வாழ்வையும், பாவ மன்னிப்பையும் எடுத்துரைக்க பாரம் கொண்டவளாக அங்கு சென்றார்.

# உனது பெயர்

கிறிஸ்துவுக்காக எதை செய்தீர்களோ அதுவே நிலையாய் நிற்கும். பரிசுத்தரின் அழைப்பின் சத்தத்தை நீ இந்த நாளில் தெளிவாய் கேட்கின்றாய் என்பதில் ஐயமில்லை "யாரை நான் அனுப்புவேன" உனது எதிர்காலம் வளமிக்கதாகவும் வல்லமையுள்ளதாகவும் அமைவதற்கு இன்றே ஓர் அடியெடுத்து வைப்பாயா

நீ அடங்கியிருக்க வேண்டியவை – அவதானி

- தேவனுடைய வார்த்தைக்கு (பரிசுத்த வேதாமத்திற்கு)
- தேவனுடைய ஆவியானவருக்கு
- தேவனால் ஏற்படுத்தப் பட்ட குடும்பத்திற்கு
- தேவனால் நீ வைக்கப்பட்டிருக்கும் திருச்சபைக்கு
- தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஊழியத்துக்கு
- தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஐக்கியத்திற்கு
- தேவனால் ஏற்படுத்தப்பட்ட மேலான அதிகாரங்களுக்கு

தன் இளம் பிராயத்தில் நுகத்தை சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது (புலம் 3:27)

**- வேதநாயகம் சுமணன் -**

## குறுக்கெழுத்துப் போட்டி - 18 சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அத்திமரம்
5. கர்த்தர்
7. சேவல்
8. ஆபேல்
11. சோ
12. யோவேல்

**வலமிருந்து இடம்**

4. ஏசா
6. யாத்திராகமம்
8. ஆமான்

**மேலிருந்து கீழ்**


1. அந்தோனிபேசேக்
2. தினம்
3. சாறிபாத் (குழும்பியுள்ளது)
4. ஏசாயா

**கீழிருந்து மேல்**

9. நாபால்
10. ரூத்

## குறுக்கெழுத்துப் போட்டி 18 சரியானவிடைகள் எழுதியவர்கள்

1. தி. கலைக்குமரன்
2. மேரி சுலோசனா
3. மேரி கொன்ஷியா
4. J. ஜெசூரன்
5. செ. எலிசம்மாள்
6. A. எஸ்தர்
7. M.சதிகா
8. S. ராஜி
9. S. ஜோன்நொக்ஸ்
10. S. மனோகரி
11. N. தர்ஷினி
12. சுரேக்கா
13. M. சுயந்தன்



# மரணத்தின் வேளையில்... உதிர்ந்த வார்த்தைகள்

## மரணத்தை சந்திக்கும் இரண்டு கூட்ட மக்கள் இங்கே...

### 1) பரிசுத்தவான்களின் மரணத்தின் போது இறுதிப் பேச்சுக்கள்

1) டி.எல். மூடி ( D.L. Moody) : ''இது எனக்கு முடி சூட்டும் நாள்; மரணம் இதுவானால் இது எவ்வளவு இனிமையானது.''

2) கிராம்சன் என்ற தாய் (Mother Cromson) : ''கர்த்தருக்கே மகிமை; தேவதுதர்களை இந்த அறையில் காண்கிறேன்; நீங்களே அவர்களைப் பார்க்கிறதில்லையா?''

3) பிஷப் கிளாஸ்பிரென்னர் (Bishop Glosbrenner) :''எல்லாம் சரிதான; என் வீடு அங்கே மேலே இருக்கிறது. அதற்கு எனக்குரிய உரிமையும் தெளிவாயிருக்கிறது.

4) மார்டின் லூத்தர் (Martin Luther) : ''உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்'' என்று கூறி ஜீவனை விட்டார்.

5) டாப்லேடி (Toplady) : ''என்ன சூரிய பிரகாசம்! எல்லாம் வெளிச்சமாயிருக்கிறது'' என்று கூறி ஜீவனை விட்டார்.

6) ஹுல்டா ராஸ். (Hulda Ross): ''இது இவ்வளவு அழகாயிருக்கு மென்று எனக்குத் தெரியாது'' என்று கூறிக் கொண்டே ஜீவனை விட்டார்.

7) பிஷப் ஹான்பி (Bishop Hanby) : ''நான் பேரொளிக்குள் இருக்கிறேன'' என்று கூறிக்கொண்டே மரணமடைந்தார்.

8) தார்ன்டன் (Thornton the Philanthropist) என்ற தர்மசாலி: ''கிறிஸ்துவுக்குள் ஆனந்தம்; எல்லாம் நன்றாயிருக்கிறது; விலைமதிக்க முடியாத அன்புமிக்க இயேசுவே'' என்று கூறிக்கொண்டே ஜீவனை விட்டார்.

9) சாரா கூக் (Sarah Cook) : ''ஆண்டவரின் அன்பின் பிரகாசத்தின் காட்சியைக் காண்கிறேன'' என்று கூறிக்கொண்டே ஜீவனை விட்டார்.

10) ஜாண் பெய்லி (John Bailey) : ''கிறிஸ்து பூரண அழகாகவும் அன்புள்ளவராகவும் இருக்கிறார்'' என்று கூறிக்கொண்டே ஜீவனை விட்டார்.

11) வான்டர்வென்டர் (Vandervender) தன்னைச் சுற்றிலுமிருந் தவர்களைப் பார்த்து: ''அழாதீர்கள். நான் என் வீட்டிற்குப் போகிறேன'' என்று ஆறுதல் கூறி ஜீவனை விட்டார்.

12) பரிசுத்த பவுல் (St. Paul) : ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்; இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந் நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்......''

## 2) இரட்சிக்கப்படாதவர்களின் கடைசிவார்த்தைகள்

1) ஆடம்சன் (Adamson): அவர் மரிக்கும் போது ''பிசாசை நான் இந்த அறையில் காண்கிறேன'' என்று அலறிக்கொண்டே செத்தார்.

2) கே (Kay) : அவர் மரிக்கும்போது, நரகம், நரகம், நகரம் என்று அலறுவதைச் சகிக்கக்கூடாமல் அவர் உறவினர் அவர் மரிக்கும்வரை அந்த அறையை விட்டே வெளியேறிவிட்டனர்.

3) டாலிராண்ட் (Talleyread): பிரான்சு நாட்டு அரசியல் வாதி:''நாசமாய்ப் போனவர்களோடு நரக வேதனையை அனுபவிக்கிறேன'' என்று சொல்லிக் கொண்டே செத்தார்.

4) சர் தாமஸ் ஸ்காட் (Sir Thomas Scott) : ''இதுவரை கடவுளோடு நகரமோ இல்லை என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது இரண்டும் உண்டென்று அறிகின்றேன். நான் நாசமாய் அழிந்து போகிறேன்.''

5) ஹியூம் (Hume) : ''நான் நெருப்பில் வேகிறேன்; நான் நெருப்பில் வேகிறேன்.'' கடைசி நேரத்தில் மிக வேதனையுடன் செத்தார்.

6) வால்டையர் (Voltaire) : என்ற நாஸ்திகனின் மரணப்படுக் கையிலிருந்த தாதி, ''ஐரோப்பாவிலுள்ள செல்வத்தையெல்லாம் கொட்டிக் கொடுத்தாலும், ஒரு நாஸ்தீகனுடைய மரணப் படுக்கைக்கருகில் நான் இருக்கமாட்டேன'' என்றார். நாஸ்திகனின் மரணம் அவ்வளவு பயங்கரமாயிருக்கிறது.

7) திருமதி. ஜே. பிரவுண் (Mrs. J.Brown) : ''இனி எனக்கு விமோசனம் இல்லை; பிசாசுகள் இங்கே இருக்கின்றன'' என்று கூறிக்கொண்டே செத்தார்.

8) செல்வி அசினே (Miss.Acene) : ''பிசாசு என்னை நரகத்துக்கு இழுத்துக் கொண்டு போகிறான'' என்று கூறிக்கொண்டே செத்தார்.

9) நியூபோர்ட் (Newport) : ''ஐயோ, நரகத்தின் சகிக்க முடியாத வேதனைக்குள் போகிறேன்; என்று கூறும் பொழுதே செத்தார்.

10) எட்வர்ட்ஸ் (Edwards) : ''நித்திய நரகத்துக்கு உள்ளாகி நாசமாய்ப் போனேன'' என்று கூறிக்கொண்டே மாண்டார்.

11) பிரீட்மான் (Freedman): " பிசாசுகள் வந்துவிட்டன; நரகமும் என்று சொல் லிக்கொண்டே மாண்டார்.

12) வால்னி (Volney) என்ற நாஸ்தீகன். அவருடைய கடைசி நேரத்தையே பார்ப்பதற்குப் பயங்கரமாயிருந்தது. என் கடவுளே, என் கடவுளே என்று கத்திக் கொண்டே விழுந்து செத்தான்.

கிறிஸ்தவ வாழ்வின் வாழ்க்கைமாத்திரமல்ல மரணமும் அழகானதும் சந்தோசமானதுமாகவே இருக்கின்றது. இவ்வாழ்விலேயே மரணத்துக்கும் நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். ஆனால் கிறிஸ்து இல்லா வாழ்வின் முடிவு பரிதாபம்.


# கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்

நீ பயப்படாதே , நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து: நீங்கள் பயப்படாதிருங்கள் திடங்கொள்ளுங்கள். இதோ உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும் உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார். அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள். உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். அவர் வல்லமையுள்ளவர்; அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார். கர்த்தருக்குக் காத்திரு, அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து கர்த்தருக்கே காத்திரு.

பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது: இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்க ளாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். இனி மரணமுமில்லை துக்கமுமில்லை அலறுதலுமில்லை வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது.

செப். 3:15; ஏசா. 41:10; ஏசா. 35:3 42: செப். 3:17; சங். 27:14; வெளி. 21:3.4.

# குறுக்கெழுத்துப் போட்டி - 19




**இடமிருந்து வலமாக**

1. உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று அறிவித்தவன் யார்?
2. அப்போஸ்தலன் பவுலையும் அவரோடிருந்தவர்களையும் 7நாள் தங்களிடம் இருக்கும் படி வேண்டிக் கொண்டவர்கள் எந்த பட்டணத்தார்.
5. எலியாவை போஷிக்க கர்த்தர் ஆயத்தப்படுத்தியவைகளில் ஒன்று
7. பயப்படாதே நீ சாவதில்லை என்றது யாரை.
9. பழைய ஏற்பாட்டில் குடிக்க தண்ணீர் கேட்டவர்களில் ஒருவர்
12. ஒற்றுக் கேட்க வந்த பெண்

**மேலிருந்து கீழ்**

1. தன் புருஷனை பயத்தியகாரன் என்ற ஸ்திரி யார்
2. கர்த்தர் ஓங்கிய __________ உடையவர்
3. ஏதேன் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தவர் யார்?
6. உலர்ந்த எலும்புகள் உயிரடைந்து இப்படியாய் எழுந்து நின்றார்கள்
9. நீர் செய்கிற் காரியம் நல்லதல்ல என்றது யார்

**வலமிருந்து இடமாக**

8. பயப்படாதே விசுவாசமுள்ளவனாய் இரு என்றது யாரை
10. இடதுகை பழக்கமுள்ள ஒரு வீரரின் பெயர் என்ன
11. அவர் மன்னிக்கிறதற்கு __________ பெருத்திருக்கிறார்
13. தேவனுடைய நட்சத்திரங்களிற்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன் என்றது யார்?

**கீழிருந்து மேல்**

4. முள்ளுகளுக்குள் இருக்கின்ற ஓர் புஸ்பம்
10. பிடரி முறிந்து செத்தவன்.

# மூவரி முத்துக்கள்

இதய அறையை
உடைப்பது
மரணம்

நரகச் சாலையை
உடைப்பது
ஆத்துமதாகம்

பாதாளத்தின் கதவை
மறைப்பது
சுவிசேச வாசல்

தேசத்தை மறைக்குத்
தேவை
கண்ணீர் ஜெபம்

அடித்தால் அடங்கியிரு
அதுவே
சிலுவைச் செயல்

இதயத்து அழுத்தத்தை
அழிப்பது
சந்தோசம்

இழந்ததை பெறும் போது
விழுவது
கண்ணீர்

நெருக்கங்கள் பாடுகள்
தேவனிடம் சேர்க்கும்
ஏணிகள்

கடந்ததை கடத்தியும்விடும்
மறந்தும் விடும்
மனச்சாட்சி

தேசத்து சமாதானத்திற்காய்
முகத்தில் ஒரு நீரோட்டம்
கண்ணீர்

## "கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது"

*சங் 34:10*

வானத்தைப் போல பரந்ததாகவும் காற்றைப் போல வேகமாகவும் மனிதனுடைய தேவைகள் நாளாந்தம் பெருகிச் செல்கிறது. நெருக்கமான இந்நாட்களில் அதிக தேவைகளோடு ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வும் போராடிக் கொண்டே புதிய நாளைசந்திக்கிறது. எவ்வளவுதான் தேடிப் பெற்றாலும் போதுமானதாய் உள்ளது என்பதைப் பார்க்கிலும் அடுத்தது... இன்னும்... கொஞ்சம் என்னும் தேடல் சுபாவம் மனிதனோடு வந்தது என்பது நிச்சயமான உண்மையாகும்.

தற்போதைய தேசத்து சூழ்நிலையில் பொதுவாக வாழ்வு முறைகளும், நடவடிக்கை களும் மாறிப்போய் சீரழிந்த நிலையிலே மனிதர்களாலும், பாவித்துப் பராமரிக்கும் பொருட்களாலும், சத்துணவுகளாலும், ஊட்டசத்துக்களாலும், கைவிடப்பட்ட நிலையிலும் மரணத்திகிலிலும் வாழும் மனிதர்களே! நம்பவேண்டிய ஒருவர்! நம்பிக்கையின் துருகம் இயேசுகிறிஸ்து இருக்கிறார். அவரை நீ தேடும் பிள்ளையானால் எந்தச் சூழ்நிலையிலும் உன் தேவைகளைச் சந்திக்க அவர் வல்லவர். அவர் வனாந் திரத்தில் போசித்தவர், தாகம்தீர்த்தவர், கடலைப் பிளந்து பாதை போட்டு பாதுகாத்தவர். நீ அவரைத் தேடி வருவாயானால் உன்னைத் தேடி வரும் அவரது ஆசீர்வாதங்கள் அளவில்லாமல் புரண்டுவரும். அவரிடம் இருந்து புறப்படும் ஜீவ கிருபையின் ஆசீர்வாதங்கள் பாவங்கள், காயங்களில் நின்று உன்னை இரட்சிக்க வல்லது. கடலிலும், தரையிலும், வானத்திலும் உன் தேவையைச் சந்திக்கவும் கடலையும், தரையையும், வானத்தையும் அசைத்து உன் தேவைகளை சந்திப்பார் அறிவாயா?

ஓர் முறை குமாரி எண்டிகாட் என்ற ஒரு தேவ ஊழியக்காரி ஒரு சமயம் அமெரிக்காவுக்குப் பயணமானார். ஆகாய விமான போக்குவரத்து அதிகமில்லாத காலம் அது. கப்பலில்தான் பிரயாணம் பண்ண வேண்டும்.

கப்பலில் சிறிது தூரம் பிரயாணம் பண்ணினவுடனே கடல் பிரயா ணம் ஒத்து வராமையால் வாந்தி (Sea Sickness) எடுக்கத் துவங்கி விட்டார். என்ன மருந்து கொடுத்தும் வாந்தி நிற்கவில்லை. ஒன்றும் சாப்பிடவும் முடியவில்லை. மருத்துவர் அதிக பிரயாசப்பட்டுக் கடைசியில் ஆரஞ்சு பழம் சேர்ந்து கொள்ளும் என்று கண்டுபிடித்தார். கப்பலில் இருந்த ஆரஞ்சு பழங்களை யெல்லாம் அந்த அம்மையா ருக்காக பிரத்யேகப்படுத்தி வைத்தனர். கப்பலின் பண்டகசாலையில் சில பழங்களே இருந்தன. இரண்டு மூன்று நாள்கள் அப்பழங்களை சிக்கனமாக அவ்வம்மையாருக்குக் கப்பலின் சாப்பாட்டை

**நற்செய்திப் பகுதி**

கவனிக்கும் நிர்வாகியம்மாள் கொடுத்து வந்தார்கள். நான்காவது நாள் அவ்வம்மையார் ஒரு தட்டில் சில ஆரஞ்சு பழச் சுளைகளை எடுத்துக் கொண்டு வந்து எண்டிகாட் அம்மாளிடம், ''கப்பலில் உள்ள ஆரஞ்சு பழங்கள் தீர்ந்து போய்விட்டன; இன்னும் 16 நாள் பிரயாணம் இருக்கிறது. இனி நீ என்ன செய்வாயோ எனக்கு தெரியாது'' என்று சொன்னாள். அதற்கு எண்டிகாட் அம்மாள் கொஞ்சம்கூட கவலைப்படாமல் ''கிறிஸ்துவின் நற்செய்தியை நான் அமெரிக்காவில் கூற வேண்டும் என்பது ஆண்டவரின் சித்தமானால் அவர் வேண்டிய ஆரஞ்சு பழங்களைத் தருவார்'' என்று பதிலுரைத்தாள்.

அதற்கு அந்நிர்வாகியம்மாள், ''இந்த நடுக்கடலிலா?'' என்று கேட்டுவிட்டு கதவை அடைத்துவிட்டுப் போய்விட்டார்கள். எண்டிகாட் அமையாரும் தன் வழக்கப் படியே ஜெபிக்கத் துவங்கி விட்டார்கள்.

சற்று நேரத்தில் கப்பலில் சந்தடியும் ஆள்கள் அங்குமிங்கும் ஓடுவதும் பெரிய கூச்சல் போடுவதும் கேட்டது. ஆனால் எண்டிகாட் அம்மையார் அதைப்பற்றிக் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. கொஞ்ச நேரத்தில் அவர்கள் அறையின் கதவு திறக்கப்பட்டது; நிர்வாகி அம்மாள் ஒரு தட்டு நிறைய அழகான ஆரஞ்சுப் பழங்களுடன் எண்டிகாட் அம்மையாரின் முன்வந்து பழங்களை அவருக்கு கொடுத்து, ''உண்மையாகவே உன் கடவுள் நடுக்கடலில் ஆரங்சுப் பழங்களை மழைபோல் கொட்டி விட்டார்'' என்றார்கள். எப்படி என்று கேட்ட பொழுது அவர்கள் ''நடுக்கடலில் ஒரு கப்பல் தாங்கள் வழி தப்பி அலைவதாயும், தங்களுக்கு ஆகாரம் தீர்ந்து விட்டபடியால் உதவி தேவை என்று செய்தி ஒலிபரப்பப்பட்டதைக் கேட்டு, தங்கள் கப்பல் அக்கப்பலின் உதவிக்குப் போய் அவர்களுக்கு வழியைக் காட்டிக் கொடுத்ததுமல்லாமல் அவர்களுக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுத்தாயும், அதற்கு கைமாறாக அக் கப்பலில் அவர்கள் கொண்டு போய்க் கொண்டிருந்த ஆரஞ்சுப் பழங்களில் அநேகக் கூடைகளைக் கொடுத்தார்கள்'' என்று சொன்னார்கள். அக்கப்பல் தென் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்கு ஆரஞ்சுப் பழங்களை ஏற்றிக் கொண்டு சென்ற கப்பல்.

தன்பிள்ளைகளின் மேலே தேவன் எப்படி கரிசனையாய் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டாயா? நண்பனே, நண்பியே, சகோதரனே, சகோதரியே, தாயே, தகப்பனே, தம்பியே, தங்கையே இந்தத் தேவனை இந்த ஆண்டின் ஆரம்பத்திலே நம்பிடு. பழைய வருசத்தோடு பழையவைகள் ஒழிந்து போகட்டும். நடுக்கடலில் தன் பிள்ளை எண்டிகாட்டிற்காக கப்பலை திருப்பும் தேவன் ஏன்? உனக்காக வரமாட்டாரா? இன்றே நீ அவருடைய பிள்ளையாகிட அவருக்கு உன்னை அர்ப்பணித்து. வாழ்வையாக. ''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'' யோவான் 1:12

பிள்ளையாகு அவரையே நம்பு உன் வியாதியில், சாபத்தில், பாவத்தில் எல்லா நிலமை யிலும் நின்று கூப்பிடு அவரை. அவர் ஒரு நன்மையும் குறைவுபட விடவேமாட்டார்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

# "என் காலங்கள்"

ஒரு ஆண்டு முடிந்து இன்னோரு புதிய ஆண்டில் கால் பதிக்கின்றோம். ''அது கர்த்தரின் கிருபையே'' எமது முன்னாக நிற்கும் ஆண்டுகளை பார்க்கும் போது எமக்கு ஏற்படுவது ஒரு வித பய உணர்வு. எமது விசுவாசத்தில் ஒரு சலனம். என்ன நடக்கும்? நான் எவ்விதம் முகம் கொடுக்க போகின்றேன். கடந்த ஆண்டின் தோல்விகள், இழப்புக்கள் இவை எமது புதிய ஆண்டை ஒரு வித ஏக்கத்துடன் சோபை இழந்ததாக காண வைக்கும். இது சாத்தானின் மிக பெரிய தந்திரம். அவன் செயற்படுத்தும் ஆயுதம் ''கவலை'' பிலி 4:6 இல் தேவன் கூறுவது ''நீங்கள் ஒன்றுக்கும் கவலைப் படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண் ணப்பங்களை ஸ் தோத்திரத்துடன் கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள''. இங்கு கவனிக்கவும். முதலாவது ஒன்றுக்கும் கவலைப்படாது. இரண்டாவது எல்லாவற் றையும் குறித்து (தெளிவாக) தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். சர்வ ஞானமுள்ள தேவன், சர்வ வியாபி ஆன தேவன், சகலத்தையும் அறிந்தவர். ஆயினும். அவர் எதிர் பார்ப்பது நீ என்னை விசுவாசி. என்னை நம்புவாயானால், உன் தேவையை முதலில் நீ உணர்ந்து கொள். அதனை எனக்கு தெரியப்படுத்து.

> ''நீங்கள் ஒன்றுக்கும்
> கவலைப் படாமல்
> எல்லாவற்றையும் குறித்து
> உங்கள் விண்ணப்பங்களை
> ஸ் தோத்திரத்துடன் கூடிய
> ஜெபத்தினாலும்,
> வேண்டுதலினாலும் தேவனுக்கு
> தெரியப்படுத்துங்கள்''.

சங் 31:15 என் காலங்கள் எமது கரத்திலிருக்கிறது.... எனது அருமையான நண்பர்களே 2007இல் உனது காலம் ஆண்டவர்கையில். எத்தனை மகிழ்ச்சியான செய்தி. யோவான் 11ம் அதிகாரத்தில் லாசரு மரித்துப் போனான். கல்லறையில் வைத்து நாலு நாள் ஆயிற்று.... அவனது சகோதரிகள் மார்த்தாள், மரியாள், நம்பிக்கை இழந்து, உறவு இழந்து எதிர்காலத்தில் தனிமையான வாழ்வு என கலங்கி நின்றார்கள். காரணம் சகோதரன் மரித்து விட்டான். சொல்லி அனுப்பிய இயேசுவும் நேர காலத்துக்கு வரவில்லை, இவர்கள் கணிப்பின்படி காலம் பிந்தி விட்டது. இல்லை! காலமே தவறி போனது இனி நம்பிக்கையே இல்லை. இயேசு வந்தார். கலங்கியவர்கள் கண்ணீர் வடித்தார்கள். காலம் கடந்து கெட்டுப் போனதே

என்று ஏங்கி தவித்தார்கள். தமக்கு முன் நிற்பவர் முக்காலம் அறிந்த முனிவன் அல்ல, முக்காலத்தையும் தனது கரத்தில் வைத்திருக்கும் இறைவன் என்பதினை காண தவறிவிட்டார்கள். காலங்களை நன்மையால் நிறைத்து, நல்ல நாட்களை எமக்காக நியமித்துள்ள காலங்களுக்கு அப்பாற்பட்ட கர்த்தனாகிய இயேசு, அவர் மரித்த லாசருவை உயிருடன் எழுப்பி, அவர்களை மகிழ வைத்ததும் அன்றி லாசருவின் எதிர்காலம். தனது கரத்தில் உண்டு என்று உறுதி செய்தவர் அவரே.

அந்த இயேசு உனக்காகவும் எனக்காகவும் இன்றும் ஜீவிக்கின்றார். அவரண்டை நீ வருவாயா. உனது இழப்புக்கள், தோல்விகள், பயங்கள் உன்னை பயமுறுத்தும் சாத்தானின் தீய சக்திகள், உன் பாவம், அதனால் உண்டான சாபமான விளைவுகள் எதுவாயினும் உனது/எனது காலங்களை தன் கரத்திலே வைத்திருக்கும் இயேசுவிடம் உன்னை பூரணமாக அர்ப்பணி. நீ உன்னைக் கொடுத்தால் அவர் உன்னை தன் கரங்களாலே ஏந்திக் கொள்வார். சங் 91 இல் வரும் பயங்கரம், பறக்கும் அம்பு, பாழாக்கும் செல்கள் பல்குழல்கள், கிபீர்கள்...... நம்மை அழிக்கும் கொள்ளை நோய், உன்னை அழிவின் சூழல்கள், வாதைகள், பொல்லாப்புக்கள்......... ஏதும் உன்னை அணுகாது....| உன் வாழ் நாட் காலம் அவர் கையில் மறந்து விடாதே. 2007 அவர் கையில் நீ ! கலங்காதே தினமும் இயேசு என்னும் நாமத்தில் உன் காரியங்களை ஆரம்பி, அவர் இரத்தத்தால் உன்னை மூடிக் கொள்.... அது போதும் நீ நினைப்பதற்கும், எண்ணுவதற்கும் அதிகமாக உன் காலம் சிறப்பாய் அமைவதை நீ காண்பாய். தினமும் அதிசயமாய் நடத்தும் தேவனின் கிரியைகளை, குறித்து வைக்க மறக்காதே துதிப்பதற்கும் ஸ்தோத்தரிப்பதற்கும் தயங்காதே.

**ஆண்டவரின் அருட்பணியில்**

**"போல். கி.சோ"**

## வினாவிடை - 19

1. தன் புருஷனைப்போல எல்லாக் காரியத்திலும் ஒரேவிதமாக பக்தியாய் இருந்த ஸ்திரி யார்?
2. தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டு போனது யார்?
3. தங்கள் வீடுகளையும் நிலங்களையும் விற்று அப்போஸ்தலருடைய பாதத்தில் வைத்தவர்கள் யார்?
4. கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார் என்றவள்?
5. விசுவாச வீரர்களின் பெயர்ப்பட்டியலில் முதலாவது எழுதப்பட்ட பெண்மணியார்?
6. யாருடைய பிள்ளை கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது?
7. ஒளி வீசத்தக்கதாக தும்மும் விலங்கு எது?
8. தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன் யார்?
9. யுத்த நாளுக்கு ஆயத்தமாக்கப்படும் விலங்கு எது?
10. கடல் துறையருகே குடியிருப்பவன் யார்?

## சந்தா விபரம்

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்

சந்தாவிபரம், (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L Rs 100. 00 Per Year |
| இந்தியா | S.L Rs 250. 00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L Rs 350. 00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L. Rs 300. 00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்.

குறிப்பு : தற்போது ஏற்பட்டுள்ள கடதாசியின் விலையேற்றம், தபால் செலவு அதிகரிப்பு என்பவைகள் காரணமாக சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி.

- ஆசிரியர் -

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்.

## சந்தா கூப்பன்

பெயர்: ______________________

விலாசம் : ______________________

______________________

______________________

______________________

தயவு செய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

To. ______________________

______________________

______________________

______________________

______________________

Zion Church Office
No.347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

St. Joseph's Catholic Press, Jaffna, Sri Lanka.
T.P: 021 222 2378